முருகப்பெருமான் துணை

**மகான் வேதாந்தச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.01.2023, வெள்ளிக்கிழமை

1. அண்ணலாக உலக மக்களுக்கு
அன்னதான சேவை ஆற்றுகின்ற
மண்ணுலகை காக்கவந்த ஞானியே
மாதவராஜனே உமை போற்றி
2. போற்றியே சுபகிருது கலை திங்கள்
புகலுவேன் முன்னான்கோர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 13 ம் நாள் 27.01.2023, வெள்ளிக்கிழமை)
உற்றதொரு அனுகூல ஆசிதனை
உரைத்திடுவேன் வேதாந்தச் சித்தர் யானும்
3. யானும் உலக நலம்பெற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் ஞானி
ஞான தேசிகனை வணங்கி வர
நம்பிக்கை ஞானவழி உறுதியாகி
4. ஆகியே தொடர்ந்து வந்து
அனுகி உயர் தீட்சை பெற்று
மகிழவே பசிபிணி விரட்டும்
மாதருமத்தில் உதவி செய்து
5. செய்துமே அரங்கன் அவதார
சிறப்பை அறிந்து தெளிந்து
அய்யமற உலகோர் பின்பற்றி
அகிலமெங்கும் பரவச் செய்து
6. செய்துமே தருமம் விட்டு அகலா
செப்பிடுவேன் நல்வாழ்வுதனை
அய்யமற கடைபிடித்து வர
அனுகுவார் அவரவர் வாழ்விலும்
7. வாழ்விலும் மகான்கள் ஆசி
வந்தடையும் நல்வரமாகவே
ஊழ் அகன்று நல்வினைதானும்
உயர்ந்து சிறந்து வாழ்வில்
8. வாழ்வினில் தரும ஞான பலம்
வலுவாகி ஞானிகள் துணை
தாழ்விலா வழிகாட்டலாகக் கூடி
தவதரும பலமுமாகப் பெருகும்
9. பெருகவே ஞானிகள் ஆகவே
பேராசான் தயவும் ஆசியும்
முருகப்பெருமானை வணங்கிட
முழுமை சக்தி தந்திடும் வண்ணம்

10. வண்ணமுடன் ஆற்றல் பெருகி
வையகம் காக்கும் மகான்களாக
திண்ணமுடன் மாற்றம் கண்டு
தேசிகன் அமைக்கும் ஞான ஆட்சியில்

11. ஆட்சியில் இடம்பெற்று அவரவரும்
அரங்கனின் தேடலும் தேற்றமுமாக
ஆட்சிபுரிவர் ஞான வழியில்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–